பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

06 06 2025 **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

# தலைப்புச் செய்திகள்

1. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை சுயசார்பு இந்தியா கொள்கையின் வலிமையை வெளிப்படுத்தியிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தாய்மொழியில் சிந்தித்து முடிவெடுப்பது முழு திறனையும் வெளிப்படுத்துவதாக அமையும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. மத்திய – ஆசிய நாடுகள் உடனான இந்தியாவின் வர்த்தக பொருளாதார உறவு வலுவடைந்திருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

4. யுக்ரைனின் 174 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

5. **Armenia-**வில் நடைபெற்ற **Stepan Avagyan** நினைவு செஸ் போட்டியில் இந்தியாவின் அரவிந்த் சிதம்பரம் பட்டம் வென்றார்.

--இனி விரிவான செய்திகள்--

<<<<<>>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை சுயசார்பு இந்தியா கொள்கையின் வலிமையை வெளிப்படுத்தியிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இன்று ஜம்மு காஷ்மீரின் **Katra**-வில் நடைபெற்ற நிகழ்ச்சியில் செனப் பாலத்தை திறந்துவைத்ததோடு சுமார் 46 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளையும் தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இந்தியாவின் பாதுகாப்பு சூழல் அமைப்பை உலக நாடுகள் தற்போது அங்கீகரித்திருப்பதாக பிரதமர் கூறினார்.

தீவிரவாதத்துக்கு நாடு ஒருபோதும் தலைவணங்காது என்று தெரிவித்த திரு நரேந்திர மோடி, எல்லைப்பகுதியில் தாக்குதலால் பாதிப்புக்கு உள்ளான மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என்று உறுதியளித்தார்.

கடுமையான தாக்குதலுக்கு உள்ளான வீடுகளுக்கு கூடுதல் நிவாரண நிதியாக தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும், ஓரளவு பாதிப்புக்கு உள்ளான வீடுகளுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே, செனாப் நதியின் மீது கட்டப்பட்டுள்ள உலகின் மிக உயரமான ரயில்வே பாலத்தை பிரதமர் திறந்துவைத்துள்ளது வரலாற்று சிறப்புமிக்கது என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல்.முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதள பதிவில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த பாலம் 359 மீட்டர் உயரமும், ஆயிரத்து 315 மீட்டர் நீளமும் கொண்ட பொறியியல் அற்புதமாக திகழ்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

கத்ரா - ஸ்ரீநகர் இடையே வந்தேபாரத் ரயில் போக்குவரத்தையும் பிரதமர் தொடங்கிவைத்ததை சுட்டிக்காட்டிய திரு எல்.முருகன், சுற்றுலா மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு இது மேலும் உத்வேகம் அளிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

தாய்மொழியில் சிந்தித்து முடிவெடுப்பது முழு திறனையும் வெளிப்படுத்துவதாக அமையும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று, இந்திய மொழிகள் பிரிவை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

அனைத்து உள்ளூர் மொழிகளையும் பலப்படுத்துவதன்மூலம், உலக அரங்கில் முதன்மையான இடத்தை நாடு எட்டும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அனைத்து மொழிகளுக்கும் ஒரு வலுவான தளத்தை அமைத்துத்தரும் விதமாக இந்திய மொழிகள் பிரிவு செயல்படும் என்றும், நாட்டின் மொழியியல் பன்முகத்தன்மையை வெளிக்காட்டும் வகையில் இது அமையும் என்றும் அமைச்சர் கூறினார்.

அந்நிய மொழிகளின் தாக்கத்திலிருந்து நிர்வாகப்பணிகளை விடுவிக்கும் பயணத்தில் இது முக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

மொழிகளின் செழுமை மற்றும் உணர்வை குறைக்காத வகையில் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட வேண்டும் என்று திரு அமித் ஷா கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

மத்திய – ஆசிய நாடுகள் உடனான இந்தியாவின் வர்த்தக பொருளாதார உறவு வலுவடைந்திருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற இந்தியா – மத்திய ஆசிய நாடுகள் இடையேயான ஆலோசனைக்கூட்டத்தில் அவர் பங்கேற்று பேசினார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு எதிராக மத்திய ஆசிய நாடுகள் தங்களது கண்டனத்தை தெரிவித்ததற்கும், தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு ஆதரவு அளித்ததற்கும் நன்றி தெரிவிப்பதாக அவர் கூறினார்.

மத்திய ஆசிய நாடுகளின் நம்பிக்கைக்குரிய நட்பு நாடாக இந்தியா விளங்குவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, வேளாண்மை, கல்வி உட்பட பல்வேறு துறைகளில் பரஸ்பரம் பயன்பெறும் வகையில் ஒத்துழைப்பு அதிகரித்துள்ளதாக திரு ஜெய்சங்கர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், துர்க்மெனிஷ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் நாட்டு வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்றனர்.

<<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் ஊரகப்பகுதிகளின் மேம்பாடு முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் திரு பெம்மசாணி சந்திரசேகர் கூறியுள்ளார்.

கோவாவில் பிரதமரின் கிராமப்புற வீட்டுவசதித்திட்டம் தொடர்பான பயிலரங்கில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

ஊரகப்பகுதி மேம்பாட்டிற்காக மத்திய அரசு செயல்படுத்திவரும் திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

ஊரகப்பகுதிகளுக்கு பாதுகாப்பான குடிநீர், சமையல் எரிவாயு கிடைப்பதை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேபோல், ஊரகப்பகுதிகளில் துப்புரவுப்பணிகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு உலக நாடுகள் நிபந்தனையற்ற ஆதரவு தெரிவித்து வருவதாக காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு சசிதரூர் கூறியுள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் மற்றும் தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து எடுத்துரைப்பதற்கான அனைத்துக்கட்சி குழுவிற்கு தலைமை வகித்து அமெரிக்கா சென்றுள்ள அவர் வாஷிங்டனில் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்தார்.

அமெரிக்கா உட்பட ஐந்து நாடுகளில் தங்கள் குழுவினர் இந்தியாவின் நிலைப்பாட்டினை எடுத்துரைத்ததாக திரு சசிதரூர் கூறினார்.

பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான அனைத்துக்கட்சி குழுவினர், ஜெர்மனி தலைநகர் பெர்லினில் அந்நாட்டு நாடாளுமன்ற துணைத்தலைவர் திரு **Omid Nouripour-**ஐ சந்தித்து பேசினர்.

தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு ஜெர்மனி தனது ஆதரவை தீர்க்கமாக வெளிப்படுத்தியதற்காக அனைத்துக்கட்சி குழு நன்றி தெரிவித்தது.

தீவிரவாதம் எந்த வடிவில் வெளிப்பட்டாலும், அதனை வேரறுக்க வேண்டும் என்று திரு **'Omid Nouripour** வலியுறுத்தியதாக அக்குழு கூறியுள்ளது.

**<<<<<>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின்கீழ், விவசாயிகளின் வருவாயை இரண்டு மடங்காக உயர்த்தும் இலக்குடன் மத்திய அரசு செயலாற்றி வருவதாக வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

உத்தராகண்டின் டேராடூனில் இன்று அவர் விவசாயிகளை சந்தித்து உரையாடினார்.

மத்திய அரசின் திட்டங்கள் விவசாயிகளை சென்றடையவும், நாட்டின் வளர்ச்சிப்பயணத்தில் அவர்கள் பங்களிக்கவும் இதுபோன்ற உரையாடல்கள் அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

மேலும், விவசாயிகள் எழுப்பும் பிரச்சினைகளுக்கு உரிய காலத்தில் தீர்வு வழங்கப்படுவதை அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும் என்று திரு சிவ்ராஜ் சிங் சௌகான் வலியுறுத்தினார்.

**<<<<<>>>>>**

நாடு முழுவதும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண் வளர்ச்சி இயக்க பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மத்திய அரசு விவசாயிகளுக்காக செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து இதில் விளக்கம் அளிக்கப்படுகிறது.

இந்த பிரச்சார இயக்கத்தின் ஒரு பகுதியாக நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வேளாண் அதிகாரிகள், நிபுணர்கள் பங்கேற்றனர்.

இதில் கலந்துகொண்ட தேசிய வாழை ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானி திரு ஆர். பிச்சைமுத்து, வாழை நோய் தடுப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டதாக எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Voice Byte – பிச்சை முத்து – 48 Sec.)***

**<<<<<>>>>>**

மும்பை பயங்கரவாத தாக்குதல் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள **Tahawwur Rana**-வின் நீதிமன்ற காவலை வரும் 9-ஆம் தேதி வரை நீட்டித்து தில்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராணாவின் நீதிமன்ற காவல் முடிவடைந்த நிலையில், காணொலி வாயிலாக நீதிமன்றத்தில் அவர் ஆஜர்படுத்தப்பட்டபோது, சிறப்பு நீதிபதி திரு **Chander Jit Singh** இந்த உத்தரவை பிறப்பித்தார்.

இதற்கிடையே, ராணாவின் உடல்நலம் குறித்த அறிக்கையை திகார் சிறை அதிகாரிகள் வரும் 9-ஆம் தேதியன்று சமர்ப்பிக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

**<<<<<>>>>>**

யுக்ரைனின் 174 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**Bryansk, Rostov,** உள்ளிட்ட பல நகரங்கள் மீது பறந்த யுக்ரைன் நாட்டு ஆளில்லா ட்ரோன்கள் தடுத்து நிறுத்தப்பட்டு, சுட்டு வீழ்த்தப்பட்டதாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

மாஸ்கோ நகருக்கு அருகே பத்து ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும், கருங்கடல் பகுதியில் மூன்று ஏவுகணைகள் அழிக்கப்பட்டதாகவும் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

**<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

**Armenia-**வில் நடைபெற்ற **Stepan Avagyan** நினைவு செஸ் போட்டியில் இந்தியாவின் அரவிந்த் சிதம்பரம் பட்டம் வென்றார்.

இதன்மூலம், சர்வதேச தரவரிசை பட்டியலில் அரவிந்த் சிதம்பரம் ஒன்பதாவது இடத்தில் உள்ளார்.

--------------

மாஸ்கோ **Wushu** சாம்பியன் போட்டியில், இந்தியா இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

-------------

இந்தியா ஏ - இங்கிலாந்து லயன்ஸ் அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி **Northampton**-ல் இன்று தொடங்கியது.

இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து லயன்ஸ் முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து, பேட் செய்து வரும் இந்தியா ஏ அணி, முதல் இன்னிங்சில் சற்றுமுன்வரை 2 விக்கெட் இழப்பிற்கு 121 ரன் எடுத்துள்ளது.

**<<<<<END>>>>>**